


. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 08.04.2026 • மலர் 04 • இதழ்: 97 • Edition : Nagercoil • 08.04.2026 • Vol : 04 • Issue : 97 • Page : 4 • Rs. 5/-

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

### உதிப்பது உதயசூரியன்தான்:

# சீர்காழியில் ஒலித்த மக்களின் குரல்

## மு.க.ஸ்டாலின் பதிவு

சென்னை, ஏப். 8

தமிழக முதல் அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்து வருகிறார். அவர் தனது பிரசாரத்தை கடந்த மாதம் 31ந்தேதி அவரது சொந்த ஊரான திருவாரூரில் தொடங்கினார்.

ஏற்கனவே 2 கட்ட பிரசாரத்தை முடித்த அவர் 3வது கட்ட பிரசாரத்தை புதுச்சேரியில் நேற்று தொடங்கினார். நேற்று மு.க.ஸ்டாலின் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பேசுகிறார்.

நேற்று காலையில் சீர்காழியில் தென்பாதி பகுதியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நடைபயிற்சி மேற்கொண்டார். அப்போது சாலையின் இருபுறமும் நின்றுகொண்டிருந்த பொதுமக்களிடமும் நலம் விசாரித்து மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

மேலும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் மதிமுக வேட்பாளர் செந்தில் செல்வனை ஆதரித்து அவர் வாக்கு சேகரித்தார்.

இந்த நிலையில் எங்கும் திராவிட மாடல் ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

உதிப்பது உதயசூரியன்தான்: சீர்காழியில் ஒலித்த மக்களின் குரல். அண்ணன் வைகோவின் ஆதரவு பெற்ற மதிமுக வேட்பாளர் செந்தில் செல்வனுக்கு ஆதரவாக நேற்று காலை ஒன்றரை மணி நேரம் சீர்காழியின் வீதிகளில் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தேன்.

எங்கும் திராவிட மாடல் ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது. திராவிட மாடல் அரசின் திட்டங்களை நான் கூறுவதற்கு முன், மக்களே என்னிடம் சொல்லி மகிழ்கிறார்கள். சீர்காழியிலேயே அவரவர் பகுதிகளில் எத்தனை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என என்னை உரிமையோடு நிறுத்திச் சொல்கிறார்கள். இதைவிட வேறென்ன வேண்டும்! மீண்டும் கழக ஆட்சியே! வெல்வோம் ஒன்றாக! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



## நினைத்த எதையும் என்னால் செய்ய முடியவில்லை

### பழனிவேல் தியாகராஜன் பேச்சு



சென்னை, ஏப். 7

தமிழகமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளபதிவில் தெரிவித்திருப்பதாவது; தமிழ்நாட்டுக்கு வரும் மத்திய பா.ஜ.க. அமைச்சர்களும் & பா.ஜ.க. முதல்அமைச்சர்களும் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வார்களா?

தமிழ்மண்ணில் நின்று, "மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவோம்" என்று சொல்லி பரப்புரை செய்யத் தயாரா?

நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டுக்குத் தருவது எவ்வளவு? பா.ஜ.க.வால் ஆளப்படும் செல்லக்குழந்தை மாநிலங்களுக்குத் தருவது எவ்வளவு? வெளிப்படையாக அறிவிக்கத் தயாரா?

கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள் மீது தாக்குதல் தொடுக்கும் FCRA சட்டத்திருத்தத்தை முழுமையாகத் திரும்பப் பெறுவீர்களா அல்லது அடுத்த வாரமே நிறைவேற்றப் போகிறீர்களா?

இவற்றுக்கெல்லாம், பழனிசாமி தனது டெல்லி ஓனர்களிடம் பதில்பெற்றுத் தர முடியுமா?

கண்ணியமற்ற அவதூறுகளை வாந்தி எடுப்பதை விடுத்து, மக்களின் வாழ்வுரிமைப் பிரச்சினைகளை எப்போதுதான் பேசுவீர்கள்?

தமிழ்நாட்டைத் துண்டாட எத்தனை பேர் டெல்லியில் இருந்து படையெடுத்து வந்தாலும், தமிழ்நாடு தலைகுனியாது!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## சமநிலையை இழந்து பேசுகிறார் மம்தா பானர்ஜி: மாணிக்கம் தாகூர்



சென்னை, ஏப். 8

மேற்குவங்க முதல்மந்திரி மம்தா பானர்ஜி நடியா மாவட்டத்தில் தேர்தல் பிரசாரத்தின் போது இங்கிருந்து பல அதிகாரிகள் தேர்தல் பார்வையாளர்களாக தமிழகத்துக்கு தேர்தல் ஆணையத்தால் அனுப்பப்பட்டுள்ளனர். இது குறித்து பாஜகவுடன் திமுகவும், காங்கிரசும் ரகசியக் கூட்டணி வைத்துள்ளதாக பேசியிருப்பதற்கு காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

பாஜகவிற்கு எதிராக அனைவரும் ஒன்றாக போராட வேண்டிய இந்த நேரத்தில்மம்தாபானர்ஜிசமநிலையை இழந்து பேசுவதாகவும், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை பலவீனப்படுத்தும்.

பாஜகவுக்கு எதிராக எப்படி போராட வேண்டும் என்று காங்கிரசுக்கு யாரும் பாடம் எடுக்கத் தேவையில்லை. தேசிய ஜனநாயகக்கூட்டணிக்கு எதிராக ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய நேரத்தில் மம்தாவின் இந்த கருத்து மிகவும் பொறுப்பற்றது மற்றும் கண்டிக்கத்தக்கது எனவும் மாணிக்கம் தாகூர் எம்.பி. கூறியுள்ளார்.

## மராட்டிய முதல்மந்திரி கூறியதன் பொருள் என்னவென்றால்...

### முதல்அமைச்சருக்கு அண்ணாமலை பதில்



சென்னை, ஏப். 8

பாஜக எம்எல்ஏவைத் தேர்ந்தெடுத்தால்தான் மதுரைக்கு மெட்ரோ தருவோம் என்று பேரம் பேசுவதும், பிளாக்மெயில் செய்வதும்தான் மராட்டிய முதல் மந்திரியின் வேலையா? அரசியலமைப்பின் மீது உறுதிமொழி ஏற்ற ஒரு முதல்மந்திரி, எதிர்க்கட்சி ஆளும் மாநிலத்தில் வந்து இப்படி பேசுவதற்கு வெட்கப்பட வேண்டும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில் அவருக்கு தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை பதிலளித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

மதுரை மெட்ரோ திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கையைக் கூட, முறையாகத் தயாரித்துக் கொடுக்க இயலாத கையாலாகாத திமுக அரசின் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே, மராட்டிய மாநில முதல்மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் கூறியதன் பொருள் என்னவென்றால், தமிழகத்தில் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு அமையவிருக்கும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில், விரிவான திட்ட அறிக்கை முறையாகத் தயாரிக்கப்பட்டு, மதுரை மெட்ரோ திட்டத்துக்கான அனுமதி பெறப்படும் என்பதுதான்.

ஆட்சிக்கு வந்தவுடன், வெளிநாட்டு முதலீடு ஈர்ப்பு என்ற பெயரில் குடும்பத்துடன் பலமுறை இன்பச் சுற்றுலா சென்றீர்களே. என்ன முதலீடு வந்தது? எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது? மத்திய அரசின் திட்டங்களால் பெறும் வளர்ச்சிக்கு, உங்கள் ஸ்டிக்கரை ஒட்ட கூச்சமாக இல்லையா?

உங்கள் ஆட்சியில், குப்பை அள்ளுவதில் கூட ஊழல் செய்து, சென்னை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட மாநகரங்களை குப்பைக் கூடங்களாக மாற்றி, குப்பை மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறீர்களே. மதுரையில் அமைப்போம் என்று உங்கள் தேர்தல் வாக்குறுதியில் கூறிய வேளாண் பல்கலைக்கழகம் எங்கே? இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## நெல்லையில் விஜய் பிரசாரத்திற்கு 51 நிபந்தனைகள்: செங்கோட்டையன் தகவல்



நெல்லை, ஏப். 8

தமிழக சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் 234 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது. இதையொட்டி த.வெ.க தலைவர் விஜய், தனது கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில் பிரசாரம் மேற்கொள்கிறார்.

இந்த நிலையில், நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள 22 சட்டமன்ற தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து தவெக தலைவர் விஜய் நாளை (புதன்கிழமை) பிரசாரம் செய்கிறார். காலை 10 மணி அளவில் பொதுக்கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டுஉள்ளது. இதற்காக நெல்லை பாளையங்கோட்டையில் பொதுக்கூட்ட மேடை அமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

இந்த நிலையில் த.வெ.க. நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையன் நெல்லைக்கு வந்தார். அவர் நெல்லை மாவட்டத்தில் கங்கைகொண்டான் மற்றும் ராஜகோபாலபுரம், கே.டி.சி. நகர் உள்ளிட்ட விஜய் பிரசாரம் மேற்கொள்வதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் செங்கோட்டையன் கூறியதாவது: “நெல்லையில் விஜய் பரப்புரை செய்ய 51 நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன; அனைத்து நிபந்தனைகளுக்கும். உட்பட்டு பொதுக்கூட்டம் நடத்தப்படும். விஜய் பிரசாரத்திற்கு மட்டும் கடுமையான விதிமுறைகள் விதிக்கப்படுகிறது. சென்னையைத் தவிர மற்ற இடங்களில் பிரசாரம் செய்ய பெரிய அளவில் பிரச்சினை இல்லை.

என்னுடைய தொகுதியான கோபியில் நல்ல தீர்ப்பை மக்கள் எனக்கு வழங்குவார்கள். 234 தொகுதிகளிலும் தவெக வேட்பாளர்கள் வெற்றி பெற வாய்ப்பு இருக்கிறது. மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். விஜய் நாட்டை ஆள வேண்டும் என்பது மக்களின் ஆசை. அவர்களின் ஆசை கண்டிப்பாக வெற்றி பெறும். இவ்வாறு அவர் கூறினார்.

## சட்டசபை தேர்தல்: பெரம்பூர், திருச்சி கிழக்கில் விஜய்யின் வேட்புமனு ஏற்பு

சென்னை, ஏப். 8

சட்டமன்ற தேர்தலில் த.வெ.க. தலைவரும், நடிகருமான விஜய் சென்னை பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை கடந்த 30ந்தேதி வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு கல்லூரியில் உள்ள தேர்தல் நடத்தும் அலுவலரிடம் விஜய் தாக்கல் செய்தார்.

இதேபோல, திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை கடந்த 2ந்தேதி திருச்சியில் விஜய் தாக்கல் செய்தார். 2 இடங்களில் வேட்புமனு தாக்கலில் பிரமாண பத்திரத்தில் தனது சொத்துகள் உள்ளிட்ட விவரங்களை குறிப்பிட்டு இருந்தார்.

இதில் திருச்சி கிழக்கு தொகுதியில் தாக்கல் செய்த வேட்புமனுவில் தன் மீது 2 குற்ற வழக்குகள் இருப்பதாக தெரிவித்துள்ளார். ஆனால், பெரம்பூர் தொகுதியில் போட்டியிட தாக்கல் செய்த வேட்புமனுவில், தன் மீது குற்ற வழக்குகள் எதுவும் இல்லை என பிரமாண பத்திரத்தில் விஜய் குறிப்பிட்டு இருந்தார்.

மேலும், பெரம்பூர் தொகுதி வேட்புமனு தாக்கலில் 52 வயது என்று உள்ளதை, திருச்சி கிழக்கு தொகுதி மனுவில் உள்ளது போல 51 என்றும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த திருத் தப்பட்ட பிரமாண பத்திரத்தை த.வெ.க. வக்கீல் சூர்யபிரகாஷ் மற்றும் வடசென்னை வடக்கு மாவட்ட செயலாளர் சிவா ஆகி யோர் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கினார்கள்.

வேட்புமனுவில் உள்ள தவறு உடனடியாக சரிசெய்யப்பட்ட தால் வேட்புமனு தள்ளுபடி செய்யப்பட வாய்ப்பு இல்லை என்றும், இந்த விவகாரத்தில் இனி எந்த சிக்கலும் வராது என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கிடையே, திருச்சி கிழக்கு தொகுதியிலும் த.வெ.க. நிர்வாகிகளால் திருத்தப்பட்ட பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், பெரம்பூர் தொகுதியில் போட்டியிட தவெக தலைவர் விஜய் தாக்கல் செய்த வேட்புமனு ஏற்கப்பட்டதாக தேர்தல் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். வேட்புமனு பரிசீலனை தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், விஜய்யின் மனு ஏற்கப்பட்டுள்ளது. விஜய் மனு ஏற்கப்பட்டதற்கு திமுக மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மேலும் திருச்சி கிழக்கில் போட்டியிட விஜய் தாக்கல் செய்த வேட்புமனுவும் ஏற்கப்பட்டுள்ளது.

இதைபோல கொளத்தூர் தொகுதியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் வேட்பு மனு ஏற்கப்பட்டுள்ளது. சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணியில் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் வேட்புமனுவும், சாத்தூர் தொகுதியில் போட்டியிடும் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனின் வேட்புமனுவும் ஏற்கப்பட்டுள்ளது.

★ தர்மபுரியில் பாமக சார்பில் போட்டியிடும் சவுமியா அன்புமணியின் வேட்புமனு ஏற்கப்பட்டுள்ளது.

★மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிடும் பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜனின் வேட்புமனு ஏற்கப்பட்டுள்ளது.

# கல்வி முதல் பொருளாதாரம் வரை முதலிடத்திற்கு கொண்டு வந்தது தி.மு.க., ஆட்சி

## பர்கூரில் நடிகர் போஸ் வெங்கட் பேச்சு



கிருஷ்ணகிரி, ஏப். 8:

தமிழகத்தை கல்வி முதல் பொருளாதாரம் வகை பல்வேறு துறைகளில் நாட்டில் முதல் இடத்திற்கு கொண்டு வந்தது, தி.மு.க., ஆட்சியில் தான் என நடிகர் போஸ் வெங்கட் பேசினார். கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதி, தி.மு.க. வேட்பாளர் தே.மதியழகனை ஆதரித்து, தி.மு.க., நட்சத்திர பேச்சாளர் நடிகர் போஸ் வெங்கட் பிரசாரம் செய்தார். அச்சமங்கலம், காட்டு சீமனூர், சத்தலப்பள்ளி, ஐகுந்தம், உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் வேட்பாளர் மதியழகனை ஆதரித்து நடிகர் போஸ் வெங்கட் பேசியதாவது: 5 ஆண்டு கால, தி.மு.க., ஆட்சியில் எண்ணற்ற மக்கள் நல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.எல்லாதிட்டங்களும் தி.மு.க., ஆட்சியில் தான் கொண்டு வரப்பட்டது. பள்ளி மாணவர்களுக்கு சீருடை, காலை உணவு திட்டம், மகளிர் உதவித் தொகை என அனைத்து திட்டங்களையும் தந்தது, தி.மு.க. அரசு. ஐ.டி., துறையை பற்றி இப்போது தான் அனைவருக்கும் தெரியும். ஆனால், பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் ஐ.டி., பார்க்குகளை தந்தவர் கருணாநிதி. அதே பாணியில் முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. ஆட்சியில் மக்களுக்கு வழங்கப்படுவது இலவசம் அல்ல. அது மக்களுக்கான உரிமைத் தொகை. தி.மு.க., மீண்டும் ஆட்சிக்கு வநததும், 2,000 ரூபாய் மாதந்தோறும் தர போகிறார். கல்வி முதல் பொருளாதாரம் வரை, தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இந்த தொகுதி எம்.எல்.ஏ., தே.மதியழகன், உங்கள் பகுதியில், 44 கோடி ரூபாய்க்கு சாலை பணிகள், 30 ஆண்டு கால கோரிக்கையான ரேஷன் கடைகளை தந்துள்ளார். குறைகளை கூறுங்கள், அதையும் நிறைவேற்றுவார். இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து மதியழகன் எம்.எல்.ஏ., பேசுகையில், "படேதலாவ் கால்வாய் திட்டம், 70 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது. இன்னும் 8 மாதங்களில் முழுமையாக முடிக்கப்பட்டு இந்த பகுதிகளுக்கு தண்ணீர் வரும். ஓட்டு வீடுகள் அனைத்திற்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டித்தரப்படும்," என உறுதி அளித்தார்..

### சாமிதோப்பு அருகே

# பள்ளி வாகனம் மோதி இருசக்கர வாகனத்தில் வந்தவர் காயம்!

## வேக கட்டுப்பாட்டு இருந்தும் அதிவேகமாக செல்லும் பள்ளி வாகனங்கள் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை



நாகர்கோவில், ஏப்8

கன்னியாகுமரி மாவட்டம், சாமிப்தோப்பு அடு த்ததேரிவிளை விஜயநேரி சாலையிலில் நேற்று மாலை அதிவேகமாக வந்த தனியார் பள்ளி வாகனம் ஒன்று இருச்சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தவர் மீது மோதியதில் இருசக்கர வாகன ஓட்டிக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இதையடுத்து அருகில் இருந்தவர்கள் அவருக்கு முதலுதவி செய்தனர். மேலும் இது குறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில் தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் இந்த சாலை வழியாக பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்கள் சென்று கொண்டிருக்கிறது. சில வாகனங்கள் அதிவேகமாக செல்வதால் சாலையோரம் நடந்து செல்வோர் அச்சத்துடன் செல்லவேண்டிய நிலை உள்ளது. மேலும் பள்ளி கல்லூரி வாகனங்களுக்கு வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் போன்றவர்கள் அதனை ஆய்வு செய்து சான்று வழங்குகின்றனர். ஆனால் சில பள்ளி கல்லூரி வாகனங்கள் ஆய்வுக்குப் பின் வேக கட்டுப்பாட்டு கருவியை நீக்கிவிட்டு செல்வதால் தான் இது போன்ற விபத்துக்கள் ஏற்படுகிறது எனவே ஒவ்வொரு காலண்ட்டும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்களை ஆய்வு செய்து வேகக் கட்டுப்பாட்டு கருவி செயல்படுகிறதாஎன்பதை கண்காணிக்க வேண்டும் எனவும் இதனை கடைபிடிக்காமல் மீரும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்க அப்பகுதி மக்கள் கோரிக்கை




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி, அமைக்கப்பட்டுள்ள மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறையினை தேர்தல் பொது பார்வையாளர் டாக்டர்.ஹீரா லால், அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு,தேர்தல் தொடர்பான புகார்கள் குறித்து கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆர்.கே. கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஏ. பாலசுந்தரம், தேர்தல்வட்டாட்சியர் அன்பு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சோழவந்தான் அக்ரஹாரத்தில்

# ஜெய சங்கர ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் அனுஷ உத்சவம்



சோழவந்தான் ஏப். 8

சோழவந்தான்அக்ரஹாரம்மலையாளம்ஸ்ரீகிருஷ்ண ஐயர் வேத பாடசாலையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர சரஸ்வதி மாதாந்திர அனுஷ நக்ஷத்திர உத்சவம் ஸ்ரீ சங்கர விஜேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் ஆக்ஞைபடியும் ஸ்ரீ சத்ய சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியின்படி நடைபெற்றது ஏராளமான அக்ரஹாரம் பக்தர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்றனர் ஸ்ரீ ★மலையாளம்கிருஷ்ணய்யர்வேதபாடசாலையில்★குருவந்தனம், அனுக்ஞை, ஸ்ரீபெரியவாளுக்கு அஷ்டோத்திர பூஜைகள், பாடசாலை அத்யாபகர் வரதராஜ பண்டிட் ஜீ நடைபெற்றது தொடர்ந்து வேத பாராயணம், புணர் அர்ச்சனை மஹா தீபாராதனை, மந்திரபுஷ்பம், சதுர் வேத பாராயணம், தோடகாஷ்டகம்,மற்றும் பிரசாதம் அன்ன தானம் வழங்கப்பட்டது ஏற்பாடுகளை அத்யாபகர் ★வரதராஜ★ ★பண்டிட்ஜீ★ ★ஸ்ரீ ஹரிஷ் ஸ்ரீநிவாச ஐயர்★ சிறப்பாக செய்திருந்தனர்

# வாழ்மங்கலம் மழை மாரியம்மன் கோவிலில் தீமிதி திருவிழா திரளான பக்தர்கள் பங்கேற்பு



நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் அகரக்கொந்தகை ஊராட்சி உள்ள வாழ்மங்கலம் கிராமத்தில் மழை மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் ஆண்டுதோறும் தீமிதி திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான ஆண்டு திருவிழாவையொட்டி பந்தக்கால் முகூர்த்தம், கஞ்சி வார்த்தல், பூச்சொரிதல் நிகழ்ச்சியுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவையொட்டி அம்மனுக்கு மஞ்சள், பால், பன்னீர், தயிர், தேன், இளநீர், மாப்பொடி, திரவியப்பொடி உள்ளிட்ட பொருட்களால் சிறப்பு அபிஷேக ஆராதனையும், சந்தனகாப்பு அலங்காரம் நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தீமிதி திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தீ குண்டத்தில் இறங்கி தங்களது நேர்த்திக் கடன்களை செலுத்தினர். பின்னர் அம்மன் சிறப்பு அலங்காரத்தில் அன்னவாகனத்தில் வீதியுலா நடைபெற்றது. தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை பரம்பரை அறங்காவலர் அழகர் (எ) சௌரிராஜன் மற்றும் கோவில் நிர்வாகிகள் செய்திருந்தார்.

# புறாக்கிராமம் அரசு பள்ளியில் ஆண்டு விழா



நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் கட்டுமாவடி ஊராட்சியில் உள்ள புறாக்கிராமம் அரசு தொடக்கப் பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு வட்டார கல்வி அலுவலர் சிவக்குமார் தலைமை தாங்கினார். பள்ளி மேலாண்மை குழு தலைவர் பாஜுகனி முன்னிலை வகித்தார். முன்னதாக பள்ளி தலைமை ஆசிரியர் ஜோஸ்பின் புவனராணி வரவேற்றார். உதவி தலைமை ஆசிரியர் செந்தில் ஆண்டறிக்கை வாசித்தார். இதில் தலைமை ஆசிரியர்கள் ரமேஷ், கலைச்செல்வி, மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார். இதில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், மாணவ மாணவியர்கள், முன்னாள் மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியர் வினோதினி நன்றி கூறினார். நிகழ்ச்சியில் வரும் கல்வி ஆண்டில் பயில 30 புதிய மாணவர்களுக்கு சேர்க்கை நடைபெற்றது.



நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026ஐ முன்னிட்டு 100% வாக்கு அளிப்பதை உறுதிசெய்யும் விதமாகவும், நேர்மையாக வாக்களிப்பதை வலியுறுத்தும் விதமாகவும் ஆட்டோக்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டது.



மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப.,அவர்கள் (07.04.2026) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 195–திருப்பரங்குன்றம் சட்டமன்றம் மற்றும் 196–திருமங்கலம் சட்டமன்றம் ஆகிய தொகுதிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு, அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.கே.அரவிந்த் இ.கா.ப., அவர்கள் உடன் உள்ளார்.



திருச்சி மாவட்டம் துறையூர் சட்டமன்ற தொகுதியில் இணையதள வசதிகளை குறித்து மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார். இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி வாக்குப்பதிவுநடைபெறும்அன்றுவாக்குப்பதிவுஅலுவலர்கள்வாக்குப்பதிவுதொடர்பாக இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை தேர்தல் ஆணைய செயலியில் பதிவேற்றம் செய்திட ஏதுவாக அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் இணையதள வசதி உள்ளிட்ட தொலைதொடர்பு வசதிகளை உறுதி செய்யும் வகையில் திருச்சி மாவட்டம் துறையூர்தனிசட்டமன்றதொகுதிக்குட்பட்டபச்சைமலைபகுதியில்உள்ளவாக்குச்சாவடி மையங்களில் திருச்சி மாவட்ட ஆட்சியரும் தேர்தல் நடத்தும் அதிகாரியுமான சரவணன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப.,அவர்கள் (07.04.2026) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், ஒத்தக்கடையில் உள்ள விவசாயக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு, அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். வாக்கு எண்ணும் மையத்தில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் தனித்தனியாக அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணும் அறைகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பதற்கான காப்பறைகள், தபால் வாக்குகள் வைக்கப்படும் காப்பறைகள், தேர்தல் பார்வையாளர் அறை, தேர்தல் நடத்தும் அலுவலர் அறை மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.கே.அரவிந்த் இ.கா.ப., அவர்கள் உடன் உள்ளார்.

# தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்ட மையத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர், ஏப்.8

தஞ்சாவூர் மாவட்ட கூடுதல் நீதிபதி நாகராஜன் அவர்களின் மனைவி மேனகா அவர்கள், தமது இல்லத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த நீதித்துறை ஊழியர், ஜெயலட்சுமியை தற்கொலைக்கு தூண்டியதை கண்டித்தும், நீதிபதியின் மனைவி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு நடத்த அவேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்ட மையத்தின் சார்பில் நாகப்பட்டினம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு மாவட்டச் செயலாளர் முருகேசன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன் விளக்க உரையாற்றினார். அனைத்து துறை ஓய்வூதியர் சங்க வட்ட தலைவர் ஆர்.மாரிமுத்து,

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் த.ஸ்ரீதர், புள்ளியியல் அலுவலர் சங்க மாநிலத் துணைச் செயலாளர் ப.அந்துவன்சேரல், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட தலைவர் அ.தி.அன்பழகன், நீதித்துறை ஊழியர் சங்க முன்னாள் மாநில செயற்குழு உறுப்பினர் சந்திரசேகரன் ஆகியோர் கண்டன உரையாற்றினார். செயற்குழு உறுப்பினர் துரை மாணிக்கம் நன்றியுரை ஆற்றினார். நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# பறக்கும் படை சோதனையில் ரூ. 2 1/2 கோடி பறிமுதல்

## மாவட்ட ஆட்சியர் கந்தசாமி தகவல்



ஈரோடு ஏப் 8

ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியும் கலெக்டருமான கந்தசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது

ஈரோடு மாவட்டத்தில் வேட்புமனு தாக்கல் நிறைவு பெற்றுள்ளது. 8 தொகுதிகளும் 195 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர். நாளை மறுநாள் (வியாழக்கிழமை) இறுதி வேட்பாளர் பட்டியல் சின்னத்துடன் வெளியிடப் படும். ஈரோடு மாவட்டத்தில் ஏற்கனவே 7 லட் சத்து 40 ஆயிரத்து 222 வாக் காளர் இடம் பெற்றிருந்தனர். தற்போது புதிய வாக்காளர் கள் சேர்க்கப்பட்டு கூடுதல் இணைப்புடன் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட்டுள்ளோம். இதில் ஆண் வாக்காளர்கள் 8 லட்சத்து 47 ஆயிரத்து 197 பேரும், பெண் வாக்காளர்கள் 9 லட்சத்து 16 ஆயிரத்து 778 பேரும் மூன்றாம் பாலினத்தவர்கள் 158 பேரும் என மொத்தம் 17 லட் சத்து 59 ஆயிரத்து 157 வாக்கா ளர்கள் உள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் 984 வாக்குச்சாவடி மையங்களில் 2 ஆயிரத்து 379 வாக்குச்சாவ டிகள் அமைக்கப்பட்டுள் ளன அனைத்து வாக்குச்சா டிகளிலும் அடிப்படை வசதிகளை உறுதி செய்துள்ளோம்.

பதற்றமான 55 வாக் குச்சாவடி மையங்களில் 73 வாக்குச்சாவடிகள் இருப்பதை கண்டறிந்து உள்ளனர். 2 ஆயிரத்து 379 வாக்குச்சாவடிகளிலும் உள்ளேயும், வெளியேயும் வெப் கேமராக்கள் பொருத்தப் பட்டு, கண்காணிக்கப்படும்.

8 தொகுதிகளுக்கும் தேவை யான மின்னணு வாக்குப்ப திவு எந்திரங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகிற 9 ந் தேதி வேட்பு மனுக்களை வாபஸ் பெறலாம். அன்று மாலை வேட்பாளர் இறுதிப்பட்டியல் சின்னங்கள் வெளியிடப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் 06.04.2026 வரையிலான நிலவரப்படி வாகன சோதனைகள் மற்றும் கண்காணிப்புப் பணிகளில் ரூ.1.59 லட்சம் ரொக்கப்பணமும் ரூ.3.47 லட்சம் மதிப்புள்ள மது பானங்கள், ரூ.28.22 லட்சம் மதிப்புள்ள போதைப்பொருட்கள், ரூ.5200 லட்சம் மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளிப்பொருட்கள், ரூ.5.44 லட்சம் மதிப்புள்ள இதர பொருட்கள் மற்றும் இலவசங்கள் என மொத்தம் ரூ.2.49 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் ரொக்கமாக பறிமுதல் செய்யப் பட்ட ரூ.150 கோடி ரூபாய் விடுவிக்கப்ப ட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

விளாத்திகுளம் தொகுதியில்

# அதிமுக வேட்பாளர் சத்யா வாக்கு சேகரிப்பு



விளாத்திகுளம் ஏப் 08.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் சத்யா தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அவர் குமரெட்டியாபுரம் (சீகம் பட்டி), குதிரைக்குளம், ஜம்புலிங்கபுரம், ஓம் சரவணபுரம், சில்லாங்குளம், பரமன்பச்சேரி, மேலமங்களம், கப்பிக்குளம், கீழமங்களம், குப்பனாபுரம், மேலமுடிமன், கீழமுடிமன், துரைச்சாமிபுரம், வெங்கடசலபுரம், வெள்ளாரம், வி.தளவாய்புரம், கே.சுப்பிரமணியபுரம் (கட்டமல் ஊரணி), ஜெகவீரபாண்டியபுரம், கச்சேரி தளவாய்புரம், கன்னக்கட்டை, சோ ழபுரம், புங்கவர்நத்தம், லக்கம் மாள்தேவி, சுப்பிரமணியபுரம், போடுபட்டி, பொம்மையாபுரம், மீனாட்சிபுரம், முள்ளப்பட்டி, விட்டிலாபுரம், பசுவந்தனை, நாகம்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் சென்று வாக்கு சேகரித்தார்.

அப்போது அவர் அதிமுக தேர்தல் வாக்குறுதிகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்து, குடிநீர் வசதி மேம்பாடு, சாலை வசதி, விவசாய வளர்ச்சி, பெண்கள் நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதாக உறுதியளித்தார். மேலும் விளாத்திகுளம் தொகுதியை முழுமையாக முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அதிமுகக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார். சத்யாவிற்கு கிராமம் தோறும் பொதுமக்கள் சார்பில் மாலை அணிவித்தும் ஆரத்தி எடுத்தும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பெண்கள் ஆரத்தி எடுத்தும், இளைஞர்கள் முழக்கங்கள் எழுப்பியும் அவருக்கு ஆதரவு தெரிவித்தனர். பிரச்சாரத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் அதிமுக தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்ட வேளாண்மைத்துறையின் சார்பில்

# சிறுதானியங்களால் அலங்கரிக்கப்பட வாக்காளர் விழிப்புணர்வு




திருப்பூர்:ஏப்08

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்தில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வேளாண்மைத்துறையின் சார்பில் சிறுதானியங்களால் அலங்கரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு. ஏற்படுத்தப்பட்டதை பார்வையிட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, இணை இயக்குநர் (வேளாண்மை) எம்.ஆதிசாமி. மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி இயக்குநர் (பயிற்சி) ஹர்ஷா அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்..

# பள்ளிக்கு சென்ற இரு மாணவர்கள் காணவில்லை

சுசீந்திரம்.ஏப்.8

சுசீந்திரம் அருகே உள்ள புத்தளம் அரிய பெருமாள் விளைகாலனி சார்ந்தவர் பிரிட்டோ என்பவரது மகன் கிப்ஸன் ஜோஸ் 12 மற்றும் அதே பகுதியைச் சார்ந்த ஜெயஸ்ரீ ராஜன் என்பவரது மகன் ரோகித் இருவரும் அருகே உள்ள தனியார் பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்து வருகின்றனர் வழக்கம்போல் காலையில் பள்ளிக்கு சென்று வருகிறேன் எனக் கூறி சென்ற இரு மாணவர்களும் கடந்த 6 ம் தேதி முதல் காணவில்லை பல்வேறு இடங்களில் தேடியும் உறவினர் வீடுகளில் சென்று விசாரித்தும் இரு மாணவர்களும் வீட்டிற்கு திரும்பவில்லை இதனால் மாணவர்களின் தந்தையர் சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் சுசீந்திரம் காவல்துறையினர் அப்பகுதியில் உள்ள சிசிடி கேமரா மற்றும் மாணவர்களின் செல்போன் அவரை வைத்து அவர்கள் எங்கு சென்றார்கள் என்ற கோணத்தில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# தருமபுரி சட்டமன்ற தேமுதிக வேட்பாளர் இளங்கோவன் தீவிர வாக்கு சேகரிப்பு



தருமபுரி ஏப்ரல் 08

தருமபுரி சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தருமபுரி சட்டமன்ற தேமுதிக வேட்பாளர் டாக்டர் இளங்கோவனை ஆதரித்து தருமபுரி நகர திமுகவின் சார்பில் நகர செயலாளர் நாட்டான் மாது தலைமையில் அனைத்து வார்டுகளிலும் தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

தருமபுரி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டி. செங்குட்டுவன், நகரத் துணைச் செயலாளர் வ. முல்லவேந்தன், கழக பேச்சாளர் டி .ஏ. ரவி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் அசோக்குமார் கோவிந்தன், மாவட்ட துணை செயலாளர் ரேணுகா தேவி, சுருளி ராஜன்,

வெல்டிங் ராஜா மற்றும் தேமுதிக மாவட்ட செயலாளர் குமார் நகர செயலாளர் சுரேஷ் ,திமுக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில்

# கோடை தாகத்தை தீர்க்க தர்பூசணி பந்தல் திறப்பு விழா




திருப்பூர் ஏப்08

திருப்பூரை மையமாகக் கொண்ட இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அனைத்து தரப்பு மக்களுக்கும் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கோடை காலத்தை முன்னிட்டு இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் திருப்பூர் காங்கேயம் சாலையில் உள்ள அலுவலகம் அருகில் தாகம் தீர்க்க தர்பூசணி பந்தல் நேற்று திறக்கப்பட்டது. திறப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ஆதரவற்ற முதியோர்களை வரவழைத்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு ரிப்பன் வெட்டி தர்பூசணி பந்தலை திறந்து வைத்தனர். முன்னதாக திருநங்கைகள் அவர்களுக்கு பூத்தூவி வரவேற்பு அளித்தனர். பின்னர் பொது மக்களுக்கு தர்பூசணி, வெள்ளரிக்காய், முலாம்பழம் உள்ளிட்ட பழ வகைகள் வழங்கப்பட்டது. பொதுமக்களும் ஆர்வமாக வந்து பழச்சாறு அருந்தி தாகத்தை தனித்தனர்.

அதனைத் தொடர்ந்து இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனத் தலைவர் இந்திரா இது குறித்து கூறுகையில் : கடந்த ஆறு வருடங்களாக கோடை காலத்தில் பொதுமக்களின் தாகத்தை தணிக்க தினந்தோறும் 500 கிலோ தர்பூசணி பழம், மற்றும் 1500 லிட்டர் ஜூஸ் தயாரித்து பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறோம். அந்த வகையில் நேற்று ஆதரவற்ற முதியோர்களை வரவழைத்து இந்த சேவையை தொடங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் வருகிற 60 நாட்களுக்கு இந்த சேவை தொடரும் என தெரிவித்தார். இந்நிகழ்வில் இந்திரா சுந்தர தொண்டு நிறுவனர் இந்திரா, செயலாளர் ராஜா முகமது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பத்மநாபபுரம் தொகுதி வாக்குசாவடிகள்: கலெக்டர் ஆய்வு



நாகர்கோவில், ஏப்.8

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்றத்தொகுதி வாக்குச்சாவடி மையங்களிலும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களை கலெக்டர் அழகுமீனா நேற்று ஆய்வு மேற்கொண்டார். திருவட்டார் அரசு தொடக்கப்பள்ளி, வேர்கிளம்பி முதலார் அரசு நடுநிலைப்பள்ளி ஆகிய வாக்குச்சாவடி மையங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அவர் கூறியதாவது:

குறிப்பாக முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தடையின்றி வாக்குச்சாவடிக்குள் சென்று வர ஏதுவாக, தரமான சாய்வுதளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வாக்காளர்கள் வரிசையில் நிற்கும்போது வெப்பத்தின் தாக்கம் தெரியாமல் இருக்க நிழற்குடைகளும், போதிய குடிநீர் வசதிகளும் மேற்கொள்பட்டு வருகின்றன. வாக்குப்பதிவு அறைகளில் போதிய வெளிச்சம் இருப்பதை உறுதி செய்ய கூடுதல் மின்விளக்குகள் மற்றும் தடையில்லா மின்சார வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பள்ளி மற்றும் பொதுக்கட்டடங்களில் அமைந்துள்ள வாக்குச்சாவடி வளாகங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு, கழிப்பறை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. என கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் திருவட்டார் வட்டாட்சியர் மரகதவல்லி, தலைமையாசிரியகள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

முத்துப்பட்டி தேசிய நெடுஞ்சாலையில்

# தரைப்பாலம் அமைக்க கோரி பொதுமக்கள் சாலை மறியல்



தருமபுரி ஏப்ரல் 08

தருமபுரி ஊராட்சிக்குட்பட்ட முத்துப்பட்டி தேசிய நெடுந்சாலையில் தரைப்பாலம் அமைத்து தர கோரி சவுளூர், குண்டல்பட்டி, நடுஅள்ளி, பால்காரன் கொட்டாய் உள்பட 15 கிராமங்களை சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட கிராம மக்கள் கையில் கருப்பு கொடியுடன், தேர்தலை புறக்கணித்து சேலம் கிருஷ்ணகிரி நான்குவழிசாலை அருகே முத்துப்பட்டி பிரிவு சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். பாலக்கோட்டில் இருந்து காரிமங்கலம் செல்லும் அரசு பேருந்தை சிறை பிடித்து மறியலில் ஈடுபட்டனர். எங்கள் கிராமத்திற்கு தரைபாலம் அமைத்து தராவிட்டால் வரும் சட்டமன்ற தேர்தலை புறக்கணித்து, அனைவரும் வாக்காளர் அடையாள அட்டையை அரசிடமே திருப்பி தருவதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர். இந்த தகவல் அறிந்து வந்த காவல் துணை கண்காணிப்பாளர் சிவராமன், வட்டாச்சியர் சுகுமார் ஆகியோர் மறியலில் ஈடுபட்ட கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்க காவல்துறையினர் பாதுகாப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.






கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு மைதானத்தில், கிருஷ்ணகிரி அரசு மகளிர்கலைக்கல்லூரியில்பயிலும்2,800மாணவிகள்கலந்துகொண்டு,நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ல், வாக்காளர்கள் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், “கிருஷ்ணகிரி வோட்டஸ் 100 % 23.04.2026 என்ற எழுத்து வடிவில் ஒருசேர நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தியதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் சௌ.கீதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## விளவங்கோடு காங்கிரஸ் வேட்பாளரின் வேட்பு மனு

# பரிசீலனை நிறுத்தி வைத்த பின்பு மீண்டும் ஏற்பு



மார்த்தாண்டம், ஏப்.8

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக பிரவீன் என்பவர் போட்டியிடுகிறார். இவரை காங்கிரஸ் கட்சியின் தலைமையின் முழு ஆதரவுடன் வேட்பாளராக அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் பிரவீனை காங்கிரஸ் வேட்பாளராக அறிவித்ததற்கு விளவங்கோடு சட்டமன்ற தொகுதி காங்கிரசார் கடும் அதிர்ச்சியுடன் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்த தொகுதியை பொருத்தமட்டில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தொகுதிக்கு வெளியில் உள்ள நபர்களை காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்துவதாக புகார் எழுந்துள்ளது. இந்த முறை விளவங்கோடு தொகுதியை சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்த்த நிலையில், தற்போதும் கேரள மாநிலத்தை சேர்ந்த பிரவின் என்பவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக பரபரப்பான புகார் எழுதுள்ளது.

ஆனால் பிரவீன் தொகுதிக்கு உட்பட்ட தமிழக பகுதியை சேர்ந்தவர் என கூறப்படுகிறது. ஆனால் காங்கிரஸ் கட்சியில் சிலர் அவர் கேரளா மாநிலத்தை சேர்ந்தவர் என்று பரப்புரை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் பிரவீன் நேற்று முன்தினம் வேட்பு மனு தாக்கல் செய்தார். அதில் குமரி மாவட்ட முகவரி அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று வேட்பு மனு பரிசீலனை செய்யப்பட்ட நிலையில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவரும், இந்த தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடும் ஜோஸ் லால் மற்றும் பாரதிய ஜனதா கட்சி ஓபிசி அணியை சேர்ந்த ராதாகிருஷ்ணன் போன்ற நபர்கள் பிரபீனுக்கு கேரளாவிலும் தமிழகத்திலும் வாக்குரிமை உள்ளது எனவும், அதிகப்படியான குற்ற வழக்குகள் உள்ளது எனவும் கூறி வேட்பு மனு பரிசீலிக்க கூடாது என புகார் அளித்தனர்.

இதை அடுத்து பிரவீனின் வேட்பு மனு பரிசீலிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் தேர்தல் அதிகாரி நேற்று மதியம் 2:30 மணிக்குள் தகுந்த ஆவணங்களை சமர்ப்பிக்க பிரவின் தரப்பிடம் கேட்டுக் கொண்டிருந்தார். பின்னர் குறிப்பிட்ட நேரத்திற்குள் தேர்தல் அதிகாரியிடம் உரிய ஆவணங்களை சமர்ப்பித்தார்.

அதில் தற்போதைய வாக்காளர் பட்டியலில் பிரவீனின் பெயர் கேரளா உள்ளிட்ட இரண்டு இடங்களில் இல்லை என்று உறுதி செய்யப்பட்டது. குற்ற வழக்குகளிலும் பல வழக்குகள் முடிந்து விட்டதாகவும் காண்பிக்கப்பட்டது. இதையடுத்து பிரவினின் வேட்பு மனு பரிசீலிக்கப்பட்டது.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் 211 பேர் வேட்பு மனு தாக்கல்

தஞ்சாவூர் ஏப்ரல் 8

தஞ்சாவூர் மாவட்டத் திலுள்ள 8 சட்டப் பேரவைத் தொகுதிகளி ல் மொத்தம் 211 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

இதில் திருவிடை மருதூர்( தனி) தொ குதியில் அதிமுக வேட்பாளர் இளமதி சுப்பிரமணியன், கும்பகோணம் தொகுதியில் பாமக வேட்பாளர் ராமதாஸ் அணியைச்சேர்ந்த ம.க.ஸ்டாலின், பாபநாசம் தொகுதியில் அதிமுக வேட்பாளர் துரை .சண்முக பிரபு, திருவையாறு தொகு தியில் அமமுக வேட் பாளர் வேலு கார்த்தி கேயன், தஞ்சாவூர் தொகுதியில் திமுக வேட்பாளர்சண். ராம நாதன், பாஜக வேட் பாளர் கருப்பு எம்.முருகானந்தம் , ஒரத்தநாடு தொகு தியில் அதிமுக வேட்பாளர் மா.சேகர் திமுக வேட்பாளர் ஆர். வைத்திலிங்கம் பட்டுக்கோட்டை தொகுதியில் திமுக வேட்பாளர் கா. அண்ணாதுரை, அதிமுக வேட்பாளர் சி.வி.சேகர், பேரா வூரணி தொகுதியில் திமுக வேட்பாளர் என் .அசோக் குமார், அதிமுக வேட்பாளர் கோவி. இளங்கோ ஆகியோர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். மாவட்டத்தில்மொத்தத்தில்திருவிடைமருதூர் (தனி) தொகுதியில் 25 பேரும், கும்ப கோணம் தொகுதியில்29பேரும், பாபநாசம் தொகுதியில்27 பே ரும் ,திருவையாறு தொகுதியில் 24 பே ரும் ,தஞ்சாவூர் தொகுதியில் 40 பேரும், ஒரத்தநாடு தொகு தியில் 23 பேரும் , பட்டுக்கோட்டை தொகுதியில் 20 பேரும் ,பேராவூரணி தொகுதியில் 23 பேரு ம் என மொத்தம் 211 பேர் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி அமைக்கப்பட்டுள்ள மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறையினை தேர்தல் பொது பார்வையாளர் டாக்டர் ஹீராலால் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தேர்தல் தொடர்பான புகார்கள் குறித்து கேட்டறிந்தார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பாலசுந்தரம், தேர்தல் வட்டாட்சியர் அன்பு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வேப்பனப்பள்ளி தொகுதி

# சட்டமன்ற வேட்பாளர் பி.எஸ்.சீனிவாசனுக்கு மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ் தீவிர வாக்கு சேகரிப்பு



கிருஷ்ணகிரி ஏப் 8:

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் பி.எஸ். சீனிவாசனுக்கு மாவட்ட கழக செயலாளரும், ஓசூர் சட்டமன்ற உறுப்பினருமான ஒய் பிரகாஷ், பொது மக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது வாக்காளர்களிடையே பேசும்போது, தமிழக முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஐந்தாண்டு கால ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான காலை உணவு திட்டம், விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. மகளிர்கான இலவச பயணம் மகளிர் உரிமை தொகை உள்ளிட்ட ஏராளமான திட்டங்களை எடுத்துரைத்து வேப்பனப்பள்ளி சட்டமன்ற வேட்பாளர் பி.எஸ். சீனிவாசனுக்கு உதயசூரியன் சின்னத்தில் அதிகப்படியான வாக்குகளை செலுத்தி வெற்றி பெற செய்ய வேண்டும் என வாக்காளர் மத்தியிலே வாக்குகளை சேகரித்தார் இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட கழக துணை செயலாளருமான முருகன் ஒன்றிய கழக செயலாளர்கள் ரகுநாத், கருணாகரன், மனோகரன், மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி, மாவட்ட துணை பொருளாளர் ஜெயராமன், தேமுதிக மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் ராமலிங்கம், அண்ணா தொழிற்சங்க பொது செயலாளர் பி.கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# தஞ்சாவூர் தொகுதியில் திமுகவேட்பாளராக போட்டி மேயர் பதவியை ராஜினாமா செய்தார்

## சண். ராமநாதன் ஆணையரிடம் கடிதம் வழங்கினார்



தஞ்சாவூர் ஏப்ரல் 8

தஞ்சாவூர் தொகுதி யில் திமுக வேட்பாளராக போட்டியிடுவ தை தொடர்ந்து மேயர் பதவியை சண். ராமநாதன் ராஜினாமா செய்தார் இதற்கான கடிதத் தை அவர் ஆணையரிடம் வழங்கினார் தஞ்சாவூர் மாநகராட் சி மேயராக இருந்து வந்தவர் சண். ராம நாதன். இவர் கடந்த 2022 ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சி தேர்தலின் போது தஞ்சாவூர் மாநகரா ட்சி 45 வது வார்டில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று மேயராக பதவியேற்றார் இவருடைய பதவிக் காலம் அடுத்த ஆண்டு (2027) மார்ச் மாதம் வரை உள்ளது. இந்த நிலையில் சட்டமன்றத் தேர்த லில் தஞ்சாவூர் தொகுதி திமுக வேட்பாளராக சண். ராமநாதன் அறிவிக் கப்பட்டார். இதையொட்டி அவர் தனது மேயர் மற்றும் கவுன்சிலர் பணிகளை ராஜினாமா செய்தார் இதற்கான தனித்த னி ராஜினாமா கடித ங்களை ஆணையர் கண்ணனிடம் வழங்கினர். பதவியை ராஜினாமா செய்த பின்னர் சண். ராம நாதன் தலைவர்கள் சிலைகளுக்கு மாலை அணிவித்து வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தி ல் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். இது குறித்து மாநக ராட்சி ஆணையர் கண்ணன் கூறுகை யில் : தஞ்சாவூர் மாநகராட் சி மேயர் மற்றும் கவுன்சிலர் பதவிகளை சண. ராமநா தன் ராஜினாமா செய்தார். இனி அடுத் த மேயர் யார் என்பது குறித்து முடிவெடுக்க 3 மாத கால அவகாசம் உள்ளது .தேர்தல் முடிந்த பிறகு கவுன் சிலர்கள் அனைவ ரும் சேர்ந்து அடுத்த மேயரை தேர்வு செய்வார்கள் என்றார் .

## விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி

# ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியத்தில் திமுக வேட்பாளர் மார்கண்டேயன் வாக்கு சேகரிப்பு



விளாத்திகுளம் ஏப் 08.

தூத்துக்குடி மாவட்டம் பசுவந்தனை, வடக்கு கைலாசபுரம், தெற்குகைலாசபுரம், ஆழிபச்சேரி, வெங்கடாசலபுரம், பி.துரைச்சாமிபுரம் கீழமுடிமன், மேலமுடிமன், கீழமங்கலம், குப்பனாபுரம், மேலமங்கலம், கப்பிகுளம், சில்லாங்குளம், ஓம்சரவணபுரம், ஜம்புலிங்கபுரம், பரமன்பச்சேரி, குதிரைகுளம்,

நாகம்பட்டி உள்ளிட்ட ஊர்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் மார்கண்டேயன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

இந்த நிகழ்வில் ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசிவிஸ்வநாதன் உள்ளிட்ட திமுக மாவட்ட அணி நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள், கிளைச்செயலாளர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சிக்குட்பட்ட காதர்பேட்டை 17வது வார்டு பகுதியில் கடந்த 11 நாட்களாக குடிதண்ணீர் வரவில்லை என அப்பகுதி மக்கள் நகராட்சி அலுவலகம் முன்பு காலி குடங்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# முன்னாள் ராணுவ வீரர்கள் இருசக்கர வாகன தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரம்

## கலெக்டர் வரவேற்பு




நாகர்கோவில், ஏப்.8

கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் படைவீரர் நலத்துறை மற்றும் கன்னியாகுமரி ஜவான்ஸ் நலசங்கம் இணைந்து 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி முன்னாள் ராணுவ வீரர்கள் பங்கேற்ற இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி பத்மநாபபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கியது. இந்த விழிப்புணர்வு பேரணியை பத்மநாபபுரம் சார் ஆட்சியர் கொடியசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து இப்பேரணி முக்கிய வீதிகள் வழியாகச் வந்து, கடைசியாக நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை வந்தடைந்தது.

பேரணியின் போது "எனது வாக்கு விற்பனைக்கல்ல" மற்றும் "அனைவரும் வாக்களிப்போம்" போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் வைத்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்து பேரணியில் கலந்து கொண்ட இராணுவ வீரர்கள் வரும் வழிகளில் பொதுமக்களிடம் தேர்தல் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். மேலும் தவறாமல் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், ஜனநாயகக் கடமையை ஆற்றுவதில் ராணுவ வீரர்களின் பங்களிப்பு குறித்தும் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்த பேரணியை கலெக்டர் அழகு மீனா வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் பயிற்சி ராகுல்குமார், முன்னாள் இராணுவ வீர ர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## குமரி கேரளா எல்லையில்

# மாவட்ட கண்காணிப்பாளர் ஸ்டாலின் தலைமையில் கொடி அணிவகுப்பு ஊர்வலம்





மார்த்தாண்டம், ஏப்.8

2026ம் ஆண்டைய சட்டசபை தேர்தலை முன்னிட்டு, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் போலீசார் கொடி அணிவகுப்பு நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் வரும் 23 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் கேரளம், புதுச்சேரி, அசாம் மாநிலங்களில் நாளை 9ம் சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது,

அதனை முன்னிட்டு குமரி மாவட்டம் தமிழக கேரளா எல்லை களியக்காவிளையில் இருந்து படந்தாலுமூடு வரை சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மத்திய ரிசர்வ் போலீஸ் படை மற்றும் போலீசார் பங்கேற்ற கொடி அணிவகுப்பு ஊர்வலம் நடந்தது.

நிகழ்ச்சிக்கு கன்னியாகுமாரி மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் தலைமை வகித்தார். மத்திய ரிசர்வ் போலீசார், மாநில போலீசார், ஊர்க்காவல் படையினர் என 250 க்கும் மேற்பட்டோர் அணி வகுப்பு ஊர்வலத்தில் பங்கேற்றனர். நாகர்கோவில் திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் களியக்காவிளை பகுதியில் தொடங்கிய அணிவகுப்பு படந்தாலுமூடு பகுதியில் நிறைவடைந்தது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.